Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 27 புதன்கிழமை (13.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 18

## உதயனுக்கு சர்வதேச விருது

### இலங்கையில் பெறும் முதலாவது பத்திரிகை

பாரிஸ், டிசெ.13

உதயனுக்கு சர்வதேச விருது கிடைத்துள்ளது.

பிரான்ஸ் நாட்டின் ''நில எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு'' (Reporters Without Borders) வருடாந்தம் பிரசித்தி பெற்ற ஊடகவியலாளருக்கும் ஊடகங்களுக்கும் சர்வதேச மட்டத்தில் வழங்கப்படும் விருதுகளில் ஒன்றே உதயனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

செய்திகளைத் தெரிவிப்பதற்கான ஊட கங்களின் உரிமைக்கும், செய்திகளை அறிந்து கொள்வதற்கான மக்களின் உரிமைக்குமாக உதயன் போராடி (06ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' பணிமனைக்குள் புகுந்து பொலிஸ் அலுவலர் மீது சூடு!

### ஆயுதபாணிகள் இருவர் நேற்றுக்காலை கைவரிசை

யாழ்ப்பாணம், டிச. 13

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் 'உதயன் - சஞ்சீவி' பத்திரிகை நிறுவன வளாகத்தினுள் நேற்றுக்காலை திடீரெனப் பிரவேசித்த ஆயுதபாணிகள் இருவர் அங்கு காவல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

பத்திரிகை நிறுவனத்தில் கடமையில் இருந்த பணியாளர்கள் வேட்டுச் சத்தங்களால் பீதியடைந்து பாதுகாப்புத்தேடி ஓடினர். இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. (06ஆம் பக்கம் பார்க்க)

# சிவிலியன்கள் மீதான ஷெல் தாக்குதலை நிறுத்தும்படி ஐ.நா. அவசர கோரிக்கை

## மோதல் பகுதிகளில் மக்களின் உரிமைகளை பேணி நடக்க இருதரப்பிடமும் வற்புறுத்து

நியூயோர்க், டிசெம்பர் 13

பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது ஆட்லறி மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்வதை உடனடியாக நிறுத்துமாறு இலங்கையின் அரச படைகளையும், விடுதலைப் புலிகளையும் உலகப் பொது ஸ்தாபனமான ஐ.நா. வேண்டிக் கொண்டிருக்கின்றது.

இரு தரப்பினரும் மேற்கொள்ளும் படுபயங்கரமான ஆட்லறி, மோட்டார் ஷெல் தாக்குதல்கள் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் வகை தொகையின்றிப் பலியாகிறார்கள். இது மனித உரிமைகளின் காவலரான ஐ.நாவுக்குப் பெரும் கவலையை அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மனித உரிமைகளை மீறும் இந்தக் கொடூரங்களுக்கு இரு தரப்பாரும் முற்றுப்புள்ளி வைக்க முன்வர வேண்டும் என்றும் ஐ.நா. வலியுறுத்திக் கூறியிருக்கிறது.

இது தொடர்பாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் நேற்று வெளியிட்ட செய்தி வருமாறு:-

யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும் போது அதனையும் மீறி நடந்த மோதல்கள் காரணமாக இந்த வருடத்தில் இதுவரை மட்டும் 1,200க்கு மேற்பட்ட சிவிலியன்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கிழக்கில் இடம்பெயர நேரிட்டது என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள்.

கடந்த சனிக்கிழமை முதல் வாகரைப் பகுதி மீது இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் ஆட்லறி தாக்குதல்கள் காரணமாக டசின் கணக்கான அப்பாவிப் பொது மக்கள் பலியாகியிருக்கிறார்கள் என்று விடுதலைப் புலிகள், படையினர் மீது (06ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சம்பவத்தின் போது சேதமடைந்த கொட்டகை...

## கண்காணிப்புக் குழுவினர் இரு தரப்பு மீதும் புகார்!

கொழும்பு, டிசெ. 13

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் உள்ள மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவதற்கு விடுதலைப் புலிகள் கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர் என்றும் - குறித்த பகுதிகளுக்குச் சென்று உண்மை நிலைமைகளை அறிவதற்கு கண்காணிப்புக் குழுவினருக்கு இராணுவத்தினர் தடை விதிக்கின்றனர் என்றும் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இரு தரப்பு மீதும் குற் (06ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற்று புலிகளுடன் பேச்சு நடத்துக!

### கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண அரசிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ.13

''இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு உடனடியாக வாபஸ் பெற வேண்டும். அத்துடன், 'ஏ-9' தரைவழிப் பாதையை மீண்டும் திறந்து, தற்போது ஏற்பட்டுள்ள போர் சூழலைக் கட்டுப்படுத்தித் திரும்பவும் விடுதலைப் புலிகளுடன் அரசு, பேச்சு மேசைக்குச் செல்ல வேண்டும். இல்லையெனில், அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாம் போராட்டங்களை மேற்கொள்வோம்.''

- இவ்வாறு இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரம பாகு கருணாரட்ன தெரிவித்தார். நேற்று முற்பகல் கொழும்பிலுள்ள இடதுசாரி முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

''இலங்கை அரசு அமுல் செய்துள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனே நிறுத்தி, மீளவும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு மேசைக்குச் செல்ல வேண்டும். நாட்டின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, (06ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிக் குழுவிலிருந்து வெளியேறியது ஜே.வி.பி.!

### நிபுணர் குழுவின் தீர்வு யோசனையில் அதிருப்தியாம்

கொழும்பு, டிச. 13

இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகளை முன்வைப்பதற்கென அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிக் குழுவிலிருந்து விலகிக்கொள்வதாக ஜே.வி.பி. நேற்று அறிவித்துள்ளது.

அனைத்துக் கட்சிக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 17 பேர் கொண்ட நிபுணர் குழுவில் 11 பேர் சமர்ப்பித்திருக்கும் யோசனைகளில் அதிருப்தியுற்ற நிலையிலேயே தமது கட்சி அனைத்துக் கட்சிக் குழுவிலிருந்து விலகியுள்ளதாகக் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சோமவன்ஸ அமரசிங்க அங்கு மேலும் தெரிவிக்கையில், (06ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு தொடர்பான நிபுணர் குழுவின் பரிந்துரை கிடைத்த பிறகே அதுபற்றி ஐ.தே.க. முடிவு

கொழும்பு, டிசெ. 13

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக நிபுணர்கள் குழு முன்வைத்துள்ள பரிந்துரைகள்பற்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு அறிவிக்கப்பட்டதன்பின் அப்பரிந்துரைகள் தொடர்பான கட்சியின் நிலைப்பாடு தெரிவிக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றைய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக நிபுணர்கள் குழு பரிந்துரைகளை முன்வைத்திருப்பது பற்றி நாம் அறிவோம். இப்பரிந்துரைகள் அடங்கிய நான்கு வெவ்வேறு விதமான அறிக்கைகள் இக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இருந்தும் இப்பரிந்துரைகள் எமக்கு இன்னும் உத்தியோகபூர்வமாகத் தெரிவித் (06ஆம் பக்கம் பார்க்க)

## நகரப் பகுதியில் வாகனங்களை நிறுத்த 7 விசேட தரிப்பிடங்கள்

### யாழ். பொலிஸார் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ். நகரப் பகுதியில் வாகனங்களை நிறுத்துவதற்கென விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

புதிய தரிப்பிடங்கள் தொடர்பாக படையினர் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு நேற்று அறிவுறுத்தல்களையும் விடுத்தனர்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். நகரில் நடத்தப்படும் கிளைமோர் குண்டுத் தாக்குதலில் பொதுமக்கள் பலியாகின்றனர். இதன் காரணமாக பொதுமக்களின் உயிர்களை பாதுகாக்கும் பொருட்டு இராணுவத்தினராலும் பொலிஸாராலும் வாகனங்களை நிறுத்துவதற்கு சில இடங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாராலும் இராணுவத்தினரா (06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காரைநகரில் இரத்ததான முகாம்

தாவடி, டிசெ.13

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியால் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக மண்டபத்தில் இரத்ததானமுகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த முகாம் நடத்தப்படவுள்ளது. இரத்த வங்கியில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டை அடுத்து இந்த முகாம் நடத்தப்படவுள்ளதாகவும் -

இரத்ததானம் செய்யவிரும்புவோர் இந்த முகாமில் இரத்ததானம் செய்யலாம் என்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர். (203-149)


### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் விற்பனைக்குச் செல்லுபடியான 01 தொடக்கம் 4999 அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களின் இழுப்பு 19.11.2006 ஆம் திகதி நடைபெற்றது.

மத்தியஸ்தர்களாக திரு.ச.சிவராசசிங்கம் (ஓய்வுபெற்ற தபால் அத்தியட்சகர்), திரு.R.விக்னேஸ்வரமூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர்) அவர்களும் கலந்துகொண்டனர்.

**வெற்றி பெற்ற சீட்டுக்களின் எண்கள் பின்வருமாறு:-**

1ஆம் பரிசு எண் -2558, 2ஆம் பரிசு எண் -1959

3ஆம் பரிசு எண் -0777, 4ஆம் பரிசு எண் -3715

5ஆம் பரிசு எண் -2369

*10 ஆறுதல் பரிசு வெல்லப்பட்ட சீட்டுக்களின் எண்கள்:*

*(1)2582, (2) 2964, (3) 4032, (4) 2319, (5) 2898, (6) 2171, (7) 0953, (8) 4614, (9) 2471, (10) 1427.*

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்குவதற்கான திகதி அறிவிக்கப்படும்.

தொடர்பு :
Dr. எம்.தங்கராசா,
தலைவர், வடமராட்சி லயன்ஸ் கழகம்,
புலோலி மேற்கு, புலோலி.
(56776)

### றெறாசோ மாபிள் பதித்தல்

மேலைத்தேய நவீன தொழில் நுணுக்கங்களுடன்
வடகீழ் மாகாண
ஆரம்பகாலதொழில் விற்பன்னர்
**தேவையான மூலப்பொருள்களுடன் வேலை செய்துகொடுக்கப்படும்.**
சுவர், தரைக்கும் மாபிள் ரையில்ஸ் பதிப்பவர்கள்
**'மாபிள்ஸ்'**
கண்டாமை, தொல்புரம். தொ.பே.: 222 5286, 222 6729.
(56725)

### இிருட்டிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்
T.P.: 0777-903090
0777 246117


### விற்பனைக்கு

குறுகிய காலம் பாவிக்கப்பட்ட பனை மரம், கூரைத்தகடு (சீற்) 8 முழம், பனை வளை சீற் சிலாகை, 2×2 நீப்பை, முகட்டு ஓடு, சப்பு பலகை, மின்சார வயர் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - விலாஸ் பாம்,
ஆனைவிழுந்தான், பலாலிச் சந்தி,
திருநெல்வேலி சந்தி.

### திருமணசேவை

எங்களிடம் டாக்டர், எஞ்ஜினியர், எக்கவுண்டன், ஆசிரியர்கள், சைவபோசனம், விவாகரத்து பெற்றவர்கள், சுயதொழில், வர்த்தகர்கள், அரச தனியார், வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

விவரங்களுக்கு:
**சிவாலயா சர்வதேச திருமண நிலையம்**
**இல 389, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பூங்கனிச்சோலைக்கு அருகாமை)**

## தென்மராட்சிப் பகுதியில் குடும்ப அட்டை மீளாய்வு

தென்மராட்சி, டிசெ.13

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களின் உணவுப் பங்கீட்டு அட்டை நாளை வியாழக்கிழமை அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

சாவகச்சேரி வடக்கு (ஜே/303), கைதடி நுணாவில் (ஜே/309), மட்டுவில் - நுணாவில் (ஜே/311), சரசாலை வடக்கு (ஜே/317), ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலேயே பங்கீட்டு அட்டை மீளாய்வு செய்யப்படவுள்ளன.

குடும்பத் தலைவர் அல்லது குடும்ப உறுப்பினர் தமது அடையாள அட்டையுடன் பங்கீட்டு அட்டையினைக் கொண்டுவருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

## தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் திருட்டு

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மற்றும் அருகில் உள்ள தபாலகம் ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திருட்டும், திருட்டு முயற்சியும் இடம்பெற்றுள்ளன.

ஆலயத்தின் அலுவலகக் கூரையைப் பிரித்து உட்புகுந்து திருடர்கள் அங்கிருந்து 30 ஆயிரம் ரூபா பணம், சிறிய மின்பிறப்பாக்கி, தேங்காய்கள் உட்பட பல பொருள்களை அபகரித்துச் சென்றனர்.

ஆலய வாசலில் அமைந்துள்ள தெல்லிப்பழை தபாலகத்தையும் உடைத்து கொள்ளையிட முயற்சித்தனர் என்றும்-

அங்கிருந்த பெட்டகத்தை உடைக்க முடியாத நிலையில் தப்பிச் சென்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1-68)

## உடுப்பிட்டியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,டிசெ.13

உடுப்பிட்டிப் பகுதியில் நேற்று அதி காலை குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சுகாதார முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் எஸ்.ஆனந்தக்குமார் (வயது 47) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அதிகாலைவேளை இவரது வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் பெயர் கூறி அழைத்து அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். உயிரிழந்தவரின் சடலம் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (8-203-155-15-78-115)

## பெற்றோல் விநியோகம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.13

திருநெல்வேலி குகன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 6ஆம் திகதிக்கு முன்னரும் அன்றும் பெற்றோல் பெற்றுக் கொண்டவர்களுக்கு இன்று பெற்றோல் விநியோகிக்கப்படும்.

மோட்டார் சைக்கிள்களுக்கு 400 ரூபாவுக்கும் ஓட்டோக்களுக்கு 500 ரூபாவுக்கும், மோட்டார் கார்களுக்கு ஆயிரம் ரூபாவுக்கும் பெற்றோல் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாவதி நடராசா

(முன்னாள் ஆசிரியை, கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி., காரைநகர்)



காரைநகரைச் சேர்ந்த திருமதி கமலாவதி நடராஜா நேற்று (12.12.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. கணபதிப் பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் இளைப்பாறிய அதிபர் கே.கே. நடராசாவின் அன்பு மனைவியும் சிவகுமாரன் (ஆசிரியர், காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), அம்பிகாதேவி (முன்னாள் ஆசிரியை, பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் வித்தியாலயம்), Dr. ஜெயகுமாரன் (புற்றுநோய் வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் லோகேஸ்வரி (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), இராஜரட்ணம் (ஆசிரியர்)), Dr. வாசுகி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் சுகந்தன், சுகன்யா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நமசிவாயம் (முன்னாள் P.W.D. ஓவசியர்), சிவசோதி (முன்னாள் முறிகண்டியான் மருந்தக உரிமையாளர்), அமரர்களான Dr. பரஞ்சோதி, தனபாக்கியம், கனகபூசணி, திலகவதி, மகாலிங்கசூரியர், நாகபூஷணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராமநாதன், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (துறை முகச் சரக்குக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இல. 195 பலாலி வீதி, கந்தர்மட இல்லத்தில் தற்போது அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள அவரின் பூதவுடல் இன்று நண்பகல் காரைநகர் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நாளை வியாழக்கிழமை (14.12.2006) முற்பகல் 9 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, சாம்பலோடை குடும்ப மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தபாற்கந்தோரடி,*
*காரைநகர். 021 222 8001.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

### தர்மலிங்கம் சண்முகநாதன் (பத்தர்)



சிவப்பிரகாசம் வீதியைப் பிறப்பிடமாகவும் சபாபதிவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் நேற்று (12.12.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - ராசமுத்து தம்பதியரின் அன்பு மகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் சண்முகப்பிரியா புஸ்பராசா, கலைச்செல்வன், அருள்செல்வன் ஆகியோரின் தந்தையும் சுரேஸ்குமார், தர்மினி ஆகியோரின் மாமனும் கீர்த்திகன், அக்சலா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2006) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/1 சபாபதி லேன்,*
*கொக்குவில் தெற்கு, கொக்குவில்.*

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

### Congraulation



I have great pleasure in congraulating Mr.Ariyanayagam Ranjith who has been the only staff selected for the award from the H.N.B Assuran ce Jaffna Branch and to be awarded in the award's cermony to be held in Colombo on 18.12.2006. I wish him all success in the years to come.

Nallur. (56773) Mrs.A.Ranjith & Family.


### பதவி வெற்றிடம்

**வதிரி ஸ்ரீ பரமானந்த சிறார் முதியோர் இல்ல ஆச்சிரமம்**

**நிர்வாக உத்தியோகத்தர் பதவி**

*50 வயதிற்கு மேற்பட்டவர்களாயும் நல்லொழுக்கம், நிர்வாக சேவை அனுபவம் ஓய்வூதியம் பெறுவோர் விரும்பத்தக்கது.*

**ஆண் மேற்பார்வையாளர்**

*50 வயதிற்கு மேற்பட்டவர்களாயும் நல்லொழுக்கம் முன்னனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.*

*தையல் பயிற்சி ஆசிரியர் பெண்கள் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.*

*உணவு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். தொண்டுதியம் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.*

*விண்ணப்பங்கள், தலைவர் ஸ்ரீ பரமானந்தா சிறார் முதியோர் இல்ல ஆச்சிரமம், வதிரி, கரவெட்டி என்ற விலாசத்திற்கு 20.12.2006 இற்குள் கிடைக்குமாறுஅனுப்பவேண்டும்.*

தலைவர்,
தர்மகர்த்தாக்கள் சபை.
(ச51524)

### பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஆட்டோ விசேட விலைக் குறைப்பு

13.12.2006 ஆம் திகதி தொடக்கம் 30.12.2006 ஆம் திகதி வரை பின்வரும் மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோ விசேட விலைக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றது. குறைந்தளவே இருப்பு உள்ளதால் கொள்வனவுக்கு முந்துங்கள்.

| | தற்போதைய விலை | குறைக்கப்பட்ட விலை |
|---|---|---|
| ஆட்டோ | 306000/- | 281000/- |
| பல்சர் 180 | 175000/- | 164000/- |
| டிஸ்கவர்(ES) | 136000/- | 127500/- |
| CT100(UG) | 102500/- | 96000/- |
| CT100(RHL) | 95000/- | 89000/- |

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடெட்**
அதிகாரம் பெற்ற விற்பனையாளர் (56770)
**குறிஞ்சி ரேடேர்**
இல.75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. இல.: 021 222 7623



உ
ஸ்ரீராமஜெயம்

### அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோயில்

இணுவில்-மருதனார்மடம்

**வருடாந்த இலட்ச்சார்ச்சனை விஞ்ஞாபனம்**

*ஆரம்பம் :10.12.2006 ஞாயிற்றுக்கிழமை*
*பூர்த்தி :19.12.2006 செவ்வாய்க்கிழமை*
*தினமும் காலை 8 மணி ஸ்நபன அபிஷேகம் 9 மணி உபசாரபூஜை.*
*9.15 மணி இலட்ச்சார்ச்சனை*
*10 மணி ஹோமம்*

**ஆஞ்சநேய ஜெயந்திப் பெருவிழா**

*20.12.2006 புதன்கிழமை*
*காலை: 8மணி108 கலச அபிஷேகம்.*
*10மணிமுதல் 12மணிவரை சிறப்புக்கலை நிகழ்ச்சி.*
*12மணி அலங்காரபூஜை.*
*பகல் ஒரு மணி அன்னதானம்.*

*அன்றையதினம் அடியார்கள் காலை 7மணி முதல் 12மணிவரை பொங்கிப்படையிடலாம்.*

இங்ஙனம்
இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்.
ஆதீனகர்த்தா.
(56759)

**புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!**

**COMPUTER EXPRESS**
**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

*Jaffna Head office* No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

*Branch office* No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 18/12/2006 - 08.30**

மாணவர்களின் நலன்கருதி எமது கிளை நிறுவனத்தினை **இல 167,கஸ்தூரியார் வீதியில் (உதயன் பணிமனை அருகில்)** ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள் அனைத்தும் எமது கிளை நிறுவனத்திலேயே நடைபெறும். அனுமதியினை தலைமையகத்திலும் கிளை நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசறிவியல் பேராசானுக்கு அஞ்சலி



எங்கள் பல்கலைக்கழகத்தில்
அரசறிவியல் பேராசானாக, துறை
மேம்பாட்டின் வழிகாட்டியாக விளங்கி,
தமிழில் அரசறிவியலை எழுதிய
**கலாநிதி எஸ்.கே.சண்முகநாதன்**
அவர்களின் பிரிவில் தவிக்கும்
குடும்பத்தினருடன் துயர்கலந்து
அஞ்சலி செய்கின்றோம்.

பேராசிரியர், விரிவுரையாளர், மாணவர்
அரசறிவியல் - சமூகவியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் வீரசிங்கம் சிவரூபன்



மண்ணில் 27.11.1975 விண்ணில் 13.11.2006

13.11.2006 அன்று சிவபதமடைந்த எமது அன்புச்செல்வம் வீரசிங்கம் சிவரூபன் அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று (13.12.2006) புதன்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கின்றன. இவ்வைபவத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்,
ச.வீரசிங்கம் குடும்பத்தினர்.
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
தென்மராட்சி பிரதேச செயலகம்.)
கைதடி மேற்கு. (56751)

## மரண அறிவித்தல்கள்

### கலாநிதி S.K.சண்முகநாதன் (M.A,Ph.d)

(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்துறை, அரசறிவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இறுதிக்கிரியைகள் 15.12.2006 வெள்ளிக்கிழமை மு.ப 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைலாசபதி,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*
*தொ.பே: 021 2226450, 021 4591365.*
தகவல்: **அன்பு மனைவி.** (56759)

### சீவரத்தினம் தங்கம்மா



வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சீவரத்தினம் தங்கம்மா அவர்கள் 12.12.2006அன்று காலமாகிவிட்டார்.


அன்னார் சீவரத்தினத்தின் (அமரர்) அன்பு மனைவியும் கமலேஸ்வரி, பவானி, பேரின்பநாயகம், திலகவதி, பரமசிவம் (ஆசிரியர், யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), விஜயகுமார், யோகராசா (லண்டன்), லலிதா (அமரர்) ஆகியோரின் அன்புத் தாயும் கணேசலிங்கம், பஞ்சாட்சரம், செல்வரஞ்சினி, கீதாஞ்சலி, தனுசா ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.12.2006 புதன்கிழமை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: **சீ.பரமசிவம்**
**(ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி),**
**சீ.விஜயகுமார்**
**(மகன்மார்).**
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.* (56794)

### பரஞ்சோதி ஆனந்தகுமார்

(அகில இலங்கை சமாதான நீதிவான், சுகாதார முகாமைத்துவ உதவியாளா)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி ஆனந்தகுமார் (சுகாதார முகாமைத்துவ உதவி யாளர், யாழ் போதனா வைத்தியசாலை) நேற்று அகாலமரணமானார்.

அன்னார் பரஞ்சோதி - காலஞ்சென்ற சிவமணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற நாகநந்தினியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற நாகரத்தினம், ஜெகதலஜெகசோதி ஆகியோரின் மருமகனும் மோகனப்பிரியா, கீர்த்தனப்பிரியா, பிரியதர்சனா, யவனப்பிரியா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள்), மதிசுதன் (உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமாரின் (துபாய்) அன்புச்சகோதரரும் ஜெகத்குருதாஸ் (யாழ்.போதனா வைத்தியசாலை), Dr.N.விமலகாந்தன் (யாழ்.போதனா வைத்தியசாலை), ஜெகன் மோகனதாஸ் (நீர்ப்பாசன திணைகளம், கிளிநொச்சி), சிவசரவணபவ (கட்டடத் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுமதி (DPDHS Office), காலஞ்சென்ற புஷ்பா, காலஞ்சென்ற சித்திரா, சுபத்திரா (ஜேர்மனி), சத்தியபாமா (HNB,நெல்லியடி) ஆகியோரின் பெரிய அத்தானும் சிவானந்தன் (J.P), சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2006) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு உடுப்பிட்டி வல்வை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சிவனடி வாசா",*
*சந்தை வீதி, உடுப்பிட்டி.* (சி.51531)
தகவல்: **Dr.N.விமலகாந்தன்**

## மரண அறிவித்தல்

### வீரகத்தியர் சங்கரப்பிள்ளை செல்லையா

கரவெட்டி கிழக்கு, யார்க்கருவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தியர் சங்கரப்பிள்ளை செல்லையா 12.12.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் ஜெயகாந்தன் (டென்மார்க்), ஜெயசீலன் (லண்டன்), ஜெயமோகன் (உடுப்பிட்டி அ.மெ.பாடசாலை), ஜெயந்தி (யா/மாணிக்கவாசகர் வித்தி.), ஜெயராணி (யா/யார்க்கரு விநாயகர் வித்தி.), ஜெயபாமினி (யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நமசிவாயம் (கனடா), சின்னம்மா, சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரரும் சுபத்திரா (டென்மார்க்), சுதர்சினி (லண்டன்), கலைச்செல்வன் (ஹாட்லிக் கல்லூரி), நகுலேந்திரன் (திட்ட முகாமையாளர், சேவாலங்கா), கல்யாணி (மல்வானை அல்முபாரத் தேசியக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் சிவராசா (இலங்கை வங்கி கொழும்பு), தேவராசா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2006) முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**குடும்பத்தினர்.**
*அந்திரான்,*
*கரவெட்டி வடக்கு, நெல்லியடி.*

## கலைஞர்கள் தேவை

பிரம்படி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் இயங்கும் சிறீக்குமரன் இசைமன்றத்திற்கு பாடகர்கள், பாடகிகள் மற்றும் கிற்றார், ஒக்தபாட் போன்ற வாத்தியக் கலைஞர்களும் பெண் அறிவிப்பாளர் ஆகியோருடன் இம்மன்றத்திலே மேற்பார்வையாளராகக் கடமைபுரிவதற்கு (பெண்அலுவலர்) ஆகியோர் தேவைப்படுகின்றனர். விண்ணப்பதாரிகள் மேற்படி முகவரியில் இருக்கும் மன்றத்துடன் 16.12.2006ஆம் திகதிக்கு முன்னதாக மாலை 3மணி - 5மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும். (56764)

## ICT Information & Communication Technology

**Grade - 10 - 11 (2007)**

2007 ஆம் ஆண்டு தரம் 10.11ல் கணினியை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களுக்கான விசேட கணினிப்பிரிவுகள் ஆரம்பம்.

மேலதிக விபரங்களுக்கு நேரில்!

**CB Computer Academy**
T.P No 021-4590291 Station Road, Kondavil.

## சொரூபம் தவறவிடப்பட்டது

கத்தோலிக்க குரு ஒருவரால் மாதா சொரூபம், அல்பம் மற்றும் சில பொருள்கள் அடங்கிய பை ஒன்று கீரிமலை வீதியிலுள்ள விளானுக்கும், சீரணி சந்திக்கும் இடையில் 11.12.2006 தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிரமங்களைப் பார்க்காமல் அருகிலுள்ள பங்குத்தந்தையரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தொடர்பு :021 2227258.

## கல்பேட், ஊர்க்கோழிகள் உடன்தேவை

அதிகூடிய விலையில்
கொள்வனவு செய்யப்படும்.
158/4, தாசன் பாம்,
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(ICRC சந்திக்கும் கைலாசபதி கோயிலுக்கு மிடையில்)

## விற்பனைக்கு

குவாட்டா 75 சிற்றூர்தி (Land Master) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 4590908
பார்வையிடும் நேரம் பி.ப. 3-6 மணிவரை.

## தவறிவிட்டன

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சோமசுந்தரம் இலட்சுமிகாந்தனின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை மற்றும் வேலுப்பிள்ளை நகுலேஸ்வரியின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன யாழ்ப்பாணம் ஆஸ் பத்திரி வீதியில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் பூங்கனிச்சோலையில் ஒப்படைத்து உதவவும்.

## தவறிவிட்டது

அந்தோனிப்பிள்ளை றொபின்சன் என்பவர் 09.12.2006 அன்று கப்பலால் வந்த இடத்தில் அவரது உடுப்பு பொதி, பாஸ்போட், வங்கிப் புத்தகம் என்பன தெல்லிப்பழையில் தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
[illegible]
அ.றொபின்சன்.

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் வரவு செலவுத் திட்டம் - 2007

2007 ஆம் ஆண்டுக்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் வரவு - செலவுத்திட்டம் 2006ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் ஒரு கிழமைக்கு மாநகரசபை அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), (212)'பி' பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.
(சி-51528)

## கிருபாசனம் பூரண சுவிஷேச சபை புதிய ஆலய பிரதிஷ்டை ஆராதனை

*இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக அதை பரிசுத்தமாக்கினேன். (I இரா 9.3.)*
*காலம் 2006ஆம் ஆண்டு மார்கழி மாதம்*
*நாள் - புதன்கிழமை*
*திகதி - 13.12.2006*
*நேரம் - காலை 10 மணி*

*விலாசம்:*
அரசடி வீதி, கட்டுடை,
மானிப்பாய். (56772)

*தகவல்:*
**M.K.அஸ்கினாஸ்**
சபை போதகர் (ஸ்தாபகர்).

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து தங்கராசா



சாவகச்சேரி, சரசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தங்கராசா 12.12.2006 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் தேவராசாவின் (கனடா) சகோதரனும் தவமணியின் அன்புக் கணவரும் தயாழினி (பிரான்ஸ்), அமுதாழினி, யாழினி (பிரான்ஸ்), ஸ்ரீகாந்த் (மெக்கானிக்), நிமாலினி (லண்டன்), குமுதினி (கனடா), சபிதாழினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்திரன் (பிரான்ஸ்), ராஜசேகர் (I.C.R.C. யாழ்.), அமிர்தலிங்கம் (பிரான்ஸ்), கலையரசி, விநாயகமூர்த்தி (லண்டன்), றன்சித் (கனடா), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2006) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 39, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(56802)
தகவல்:
**க.ஸ்ரீகாந்த்** (மகன்),
**சி.ராஜசேகர்** (மருமகன்).

### கந்தையா அருணகிரிநாதன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருணகிரிநாதன் கடந்த ஞாயிற்றுக்கிழமை (10.12.2006) அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரராஜசேகரம் - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும் கோப்பெருந்தேவியின் அன்புக் கணவரும் இரத்தினபூபாலன் (ஓய்வுபெற்ற அதிபர் - பெரியண்ணை), பாலசுப்பிரமணியம் (வைத்தியர்), அருட்சோதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பேராயிரவரின் மைத்துனரும் கிரியா, பாமினி, சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும் விவேகானந்தன், பாலமுரளி கிருஷ்ணா, உருத்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் லக்சானந், அஞ்சலா, சந்தனா, உத்தகா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.12.2006 ஞாயிற்றுக்கிழமை கல்கிசையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
தகவல்:
**க.இரத்தினபூபாலன்**(பெரியண்ணை)
**Dr.க.பாலசுப்பிரமணியம்**
(சகோதரர்கள்).

### சதானந்தன் கலைச்செல்வன்

( உரிமையாளர், பழம்பிள்ளையார் பல்பொருள் வாணிபம், மல்லாகம்)



கட்டுவன் வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கு, மில் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சதானந்தன் கலைச்செல்வன் 12.12.2006 அன்று காலஞ்சென்றுவிட்டார்.

அன்னார் சதானந்தன் - தனலக்சுமி தம்பதியரின் அன்பு மகனும் சசிகலாவின் அன்புக்கணவரும் டினோஜன்(யாழ்.ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம் தரம் 1), சுஜானி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற வேலாயுதர் - அன்னலச்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சித்திரா, வாசுகி, கலைச்செல்வி, மித்திரா, யோகச்செல்வன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சறோஜா, ஜெயந்தி, சகுந்தலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். பிறைசூடி (முகாமையாளர் யாழ். செயலகச் சிற்றுண்டிச்சாலை), பிரபாகரன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும் கருணாமூர்த்தியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.12.2006) புதனிகிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மில் ஒழுங்கை,*
*ஏழாலை மேற்கு.* (56809)
தகவல்:
**மனைவி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி
கலாமன்ற சனசமூக நிலையத் தலைவர்
**A.R.சுரேஸ்** அவர்களின்
பாசமிகு தாய்

### திருமதி
### கமலாவதி இராமலிங்கம்

அவர்களின் பிரிவுத் துயரில்
கலாமன்றமும் இணைந்து கொள்கிறது.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு.
(56756)

**நிர்வாக சபை,**
**கலாமன்ற ச.ச. நிலையம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 08 * 04 * 1927



விண்ணுலகில் 25 * 11 * 2005

### அமரர் வைத்தி இராசையா

திதி: நவமி

**நீங்கள் உறங்கி ஆண்டு ஒன்று ஆனாலும்**
**உறங்காத உங்கள் நினைவுகளில் வாழும் உறவுகள்.**

இன்று (13.12.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ.கிருஸ்ணநாதன்,
மணியகாரன் வீதி,
வேலணை வடக்கு,
வேலணை-5.
(56752)

முதலாம் ஆண்டு நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## IIS COMPUTER COURSES

விசேட சலுகைக் கட்டணத்தில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

| பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 | பிரிவு 4 |
|---|---|---|---|
| 05.01.2007 | 06.01.2007 | 21.01.2007 | 22.01.2007 |

**DIPLOMA COURSES :**

- Dip. in Microsoft Office
- Dip. in Internet Technology
- Dip. in Computer Programming
- Dip. in Hardware Technology
- Dip. in Desk Top Publishing

**CERITIFICATE COURSES :**

| | |
|---|---|
| MS Word | Flash MX |
| MS Excel | HTML |
| MS Access | Visual Basic |
| MS Power Point | Visual C |
| Adobe Photoshop | Java |
| Adobe PageMaker | Corel DRAW |

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில்
இணைவதனூடாக
கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

**Institute of Informatics Studies**
# 100, Clock Tower Road, Jaffna.
T.P. : 021 222 2831


## மணமகள் தேவை

1973ஆம் ஆண்டு, நட்சத்திரம் அச்சுவினி 3ஆம் பாதத்தில் பிறந்த, கிரக பாவம் 19, உயரம் 5'8" உள்ள யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த U.K. நிரந்தர பிரஜாவுரிமை பெற்ற லண்டனில் பிரசித்திபெற்ற கம்பனியொன்றில் உயர் பதவி வகிப்பவருக்கு, படித்த, அழகிய மணமகள் தேவை.

ஜாதகம், புகைப்படம் மற்றும் விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். பொருத்தமற்றவை உடன் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

**தொடர்பு: விள. இல.: 2957**
**மே/பா உதயன்** (56749)


## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**
*தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.*

**தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.**
(சி/50463)


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர் கா.சிறீரங்கன்
அவர்களின் அன்புத் தந்தை

**வேலுப்பிள்ளை கார்த்திகேசு**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!ஓம் சாந்தி!

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. (சி/51527)

சாவகச்சேரி நகர சபை,
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 08.12.2006 அன்று
மறைந்த முன்னாள்
யாழ். பல்கலைக்கழகப்
பொருளியல்துறை
தலைவரும் அரசறிவியல்
சிரேஷ்ட
விரிவுரையாளருமாகிய

### கலாநிதி எஸ்.கே.எஸ்.நாதன்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமரரின் முன்னுதாரணமான கல்விச் சமூகப்பணிகளை நன்றியுடன் நினைவுகூரும் நாம் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**அரசறிவியில் விரிவுரையாளர்களும்,**
(56757) **மாணவர்களும்.**

## கண்ணீர் பூக்கள்



08-12-2006 அன்று
இறைபதம் அடைந்த
அமரர்

### நமசிவாயம் சண்முகரட்ணம்

அவர்கள்

யாழ். பொதுசன நூலகத்தில் ஆயிரம் ஆயிரம்
பூ மரங்கள் அழகுடன் நாட்டுவித்தீர் - அதில்
அத்தனை பூக்களும் இன்று அழுகின்றன
சண்முகம் ஐயா...! எங்களுக்கெல்லாம்
அலுவலகம் தனிலே அதிகாலைப் பொழுதில்
யாவர்க்கும் காலை வணக்கம் சொல்லும்
உம் கனிந்த முகத்தை என்று காண்போம்
இனி நாங்கள்...!

உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது பிரிவால் ஆறாத் துயரமடைந்திருக்கும் மனைவி, பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறுகின்றோம்.

(56774)
**யாழ். பொதுசன நூலக**
**ஊழியர்கள்.**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 08 . 05 . 1940



விண்ணில் 13 . 12 . 2002

### அமரர் பொன்னன் தர்மலிங்கம்

திதி:13.12.2006 (புதன்கிழமை)

**குணத்தின் குன்றே குடும்பத்தின் ஒளிமயமே**
**மணம் வீசும் மல்லிகையே மாண்புள்ள தந்தையே**
**உன் நினைவாய் வாழுகின்றோம்.**

நாவலடி,
உடுப்பிட்டி.
(56784)

பிரிவால் துயருறும்:
**த.ஜெயராஜ் (மகன்).**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 . 06 . 1945



மறைவு 15 . 11 . 2006

### உயர்திரு. சின்னையா தேவராசா

(ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரியர் - SLTS-I)

கடந்த 15.11.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.12.2006) புதன்கிழமை முற்பகல் 10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

"இரத்தினவாசா",
இணுவில் தெற்கு,
இணுவில்.
(56797)

**குடும்பத்தினர்.**

## 3ஆம் வருட நினைவஞ்சலி



இளவாலை மெய்கண்டான்
மகாவித்தியாலய ஆசிரியர்

### சாந்தினி ஆனந்தராஜா B.A.

தோற்றம் 20-01-1964 மறைவு 13-12-2003

*நீ வருவாயென வாசலிலே*
*பார்த்துநின்றோம்*
*பாசத்தாயே!*
*மூன்றாண்டுகள் சென்றாலும்*
*மூடாதம்மா எம் விழிகள்.*

மயிலங்கூடல்,
இளவாலை.
(56732)

**கணவர், பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**

✝

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 03 * 03 * 1966



மறைவு 13 * 11 * 2006

### அமரர் வென்சஸ்லாஸ் ஸ்ரனிஸ்லாஸ் சாந்தகுமார்

பெற்றோர்க்கு நன்மகனாக
மனைவிக்கு அன்புத் துணையாக
மக்களுக்கு அன்புத் தந்தையாக
பாசத்துடன் அரவணைத்து
பண்புடனே வளர்த்தீர்கள்
ஊர்போற்ற நாம் வாழ
பார்த்து மகிழ்ந்தீர்கள் - இன்று
ஏக்கத்துடன் எமை வாழவிட்டு
எங்கு சென்றீர்கள்?

என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்:
பெற்றோர், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், உற்றார், உறவினர்.

மணற்காடு. (56726)


## புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
## COMPUTER EXPRESS

80% Off

மாணவர்களின் நலன்கருதி எமது கிளை நிறுவனத்தினை **இல 167,கஸ்தூரியார் வீதியில் (உதயன் பணிமனை அருகில்)** ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், **அனைத்துக் கற்கைநெறிகளிற்கும் 80% கட்டணக் கழிவு வழங்குவதில் பெருமையடைகின்றோம்.**

| | | | |
|---|---|---|---|
| Diploma in Computer Science 4 மாதம் ~~8,250~~ 1,650 | Honours Diploma in Computer Science 5 மாதம் ~~10,500~~ 2,100 | Diploma In WebPage Designing 4 மாதம் ~~8,250~~ 1,650 | Diploma in Graphic Designing 4 மாதம் ~~8,250~~ 1,650 |
| Diploma In Desktop Publishing 4 மாதம் ~~7,250~~ 1,450 | Diploma in Hardware Engineering 3 மாதம் ~~7,250~~ 1,450 | Diploma in AutoCAD 3 மாதம் ~~7,250~~ 1,450 | Accounting Package ~~8,250~~ 3 மாதம் 1,650 / MS Office 3 மாதம் 1000 |

**Advances Courses** — 50% Off

Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்- வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

Start on : Batch I - 16/12/2006 ,Batch II :- 17/12/2006 ,
Batch III :- 20/12/2006 , Batch IV :- 22/12/2006

*Jaffna Head office*
No 15,
Sirambiyadi Lane.
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

*Branch office*
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna.

வகுப்புக்கள் அனைத்தும் எமது கிளை நிறுவனத்திலேயே ...
தலைமையகத்திலும் கிளை நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# முதற்கோணில் முற்றும் கோணும்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டறிய உள்ள சர்வகட்சி மாநாட்டுக்கு, ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினர் நான்காகப் பிரிந்து தனித்தனியே அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர்!

இந்த நிபுணர்கள் குழுவில் மொத்தம் பதினேழு உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். அவர்களில் பதினொரு (11) பேர் சேர்ந்து தயாரித்த அறிக்கை கடந்த வாரத்தில் உத்தியோகப்பற்றற்ற முறையில் வெளியாகியிருந்தது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நான்கு குழுக்களினது அறிக்கைகளும் சர்வகட்சி மாநாட்டிடம் கையளிக்கப்பட்டன. அவை இப்போதைக்கு உத்தியோகபூர்வமாக வெளியிடப்படமாட்டா.

சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள், நான்கு யோசனைகளையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து, அதிலிருந்தும் இதிலிருந்தும், பிய்த்துப் பிய்த்து, தொட்டும் விட்டும் உருப்படியான தீர்வுப்பொதி ஒன்றைத் தயாரிப்பார்களா என்பது இப்போது ஊகிக்கக் கூடியதல்ல.

நிபுணர் குழுவைச் சேர்ந்த 11 பேர் சேர்ந்து தயாரித்த அறிக்கை, ஊடகங்களில் வெளியாகி இருந்தது. அந்தக் குழுவில் அறுவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்.

அதிலுள்ள சிபார்சுகள் இதுவரை காலமும் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் இருந்து சற்று வித்தியாசமானதாக இருந்தது. வேண்டுமானால் சிறிதளவு முன்னேற்றகரமான யோசனையாக அமைந்தது என்று சொல்லலாம்.

மேற்படி யோசனையின் அம்சங்கள் ஊடகங்களில் வெளிவந்தமையை அரசாங்கத் தரப்பு விரும்பவில்லை. அந்த யோசனை அரசினுடையது என்று தோற்றுவிக்கவே ஊடகங்கள் அதனைப் பிரசித்திப்படுத்தியதாக ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்சன யாப்பா சாடியிருக்கிறார்.

இனப்பிரச்சினை நாட்டின் எரியும் விவகாரம், அந்தப் பிரச்சினைக்கான தீர்வுக்குரிய யோசனை கிடைத்ததால் மக்கள் அவற்றை அறியவேண்டும் என்பதற்காக ஊடகங்கள் பிரசித்தப்படுத்தின. அவ்வாறு செய்வது ஊடகங்களின் கடமை. அப்போதே மக்கள் யோசனை எத்தகையது என்பதனை அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

அந்த யோசனையில் விருப்பம் உண்டோ, இல்லையோ, அதனைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதா இல்லையா என்பதனை முடிவு செய்ய வேண்டியது அரசாங்கமே.

இது விடயத்தில் ஊடகங்கள் மீது விரலைச் சுட்டுவது, எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல. ஆனால் ஒன்று, அமைச்சர் ஊடகங்களைச் சாடுவதிலிருந்து ஒரு உண்மை வெளிவருகிறது.

சில முன்னேற்றகரமான அம்சங்கள் அடங்கிய அந்த யோசனையோடு தன்னைச் சம்பந்தப்படுத்திக்கொள்ள அரசாங்கம் விரும்பவில்லை என்பதே அந்த உண்மையாகும். அது அரசாங்கத்தின் யோசனை அல்ல என்று கூறுவதன் அர்த்தம், அதிலிருந்து அரசாங்கம் தூரவிலகி நிற்பதற்கே ஆகும்.

இதனை உட்புறமாகப் பார்த்தால், குறிப்பிட்ட யோசனையிலிருந்து - அதில் கூறப்பட்டுள்ள சிபார்சுகளை - பரிசீலனைக்கு எடுக்கப்போவதில்லை என்பதனை அமைச்சர் மறைமுகமாகக் கூறியுள்ளார்.

இதேவேளை -

நிபுணர் குழுவின் இன்னொரு யோசனை - பெரும்பான்மையினத்தவரைச் சேர்ந்த நான்கு பேர் கொண்ட குழுவின் சிபார்சு - பழைமைவாதக் கருத்துக்களையே முன்வைத்திருக்கிறது.

ஆனால், அந்தச் சிபார்சுகளில் இருந்து அரசு விலகி நிற்பதாக எதுவும் சொல்லவில்லை. அதன் அர்த்தம் என்ன? பழைமைவாதத்தின் அடிப்படையில் அமைந்த தீர்வு ஒன்றையே - அதற்கான யோசனை ஒன்றையே - தீர்வுப் பொதியின் பிரதான அம்சமாக அரசு கொள்ளக்கூடும் என்ற எண்ணப்பாட்டை - ஊகத்தை - உண்டாக்கியிருக் கிறது.

மொத்தத்தில் நிபுணர் குழுவின் யோசனைகளே சர்வகட்சி மாநாடு வரைய உள்ள தீர்வுப் பொதியின் பிரதான உள்ளடக்கமாக அமையும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆனால், அந்த யோசனைகள் முறையாக ஆராயப்படுவதற்கு முன்னரே, முந்திரிக்கொட்டை போன்று முந்திக்கொண்டு, அமைச்சர் யாப்பா சிறு முன்னேற்றகரமான முன்குறிப்பிட்ட யோசனையிலிருந்து அரசு தூரநிற்பதாக கோடி காட்டியுள்ளார்.

முதற்கோணின் முற்றும் கோணும் என்பது முதுமொழி. அரசின் தீர்வுப் பொதி கோணும் என்பதற்கான ஒரு சமிக்ஞை வெளிப்படுத்தப்பட்டிருப்பதாகக் கொள்ளலாமா?

# சிக்குன்குனியாவைக் கட்டுப்படுத்த விமானம் மூலம் 5 லட்சம் குளிசைகள்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எடுத்துவந்துள்ளது

யாழ்ப்பாணம்,டிசெ.13

குடாநாட்டில் பரவிவரும் சிக்குன் குனியா வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்த ஐந்து லட்சம் பரசெற்றமோல் குளிசைகளை கொழும்பில் இருந்து விமானம் மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எடுத்து வந்துள்ளது.

யாழ்.சுகாதார சேவைத் திணைக்களம் விடுத்த அவசர கோரிக்கையை அடுத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விமானம் மூலம் அவசர மருந்து வகைகளை எடுத்து வந்துள்ளது.

பரசெற்றமோல் உட்பட வீக்கத்தைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப் படும் மருந்து வகைகள், வலியகற்றும் மருந்து வகைகள் என மொத்தம் ஆயிரம் கிலோ மருந்து வகைகள் விமானம் மூலம் எடுத்து வரப்பட்டதாக செஞ்சிலுவைக் குழு நேற்று விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மோதலில் ஈடுபடும் தரப்புகள், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட தரப்புகள் சிவிலியன்களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்திக்கொள்ள வேண்டும்.

மக்களுக்குரிய மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு அனுசரணையாக, ஆதரவாக நடந்துகொள்ள வேண்டும் - என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வலியுறுத்தியுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் சுதந்திரமான நடமாட்ட உரிமைக்கு மோதலில் ஈடுபடும் தரப்புகள் மதிப்பளிக்க வேண்டும் என்று செஞ்சிலுவைக் குழு வலியுறுத்தியுள்ளது.(அ-1)

# குழந்தைகளுக்கான பால் மா விநியோகம் இன்றும் நாளையும் ஊர்காவற்றுறையில்

யாழ்ப்பாணம்,டிசெ.13

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இன்றும் நாளையும் அங்கர் 3' பால்மா வழங்கப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை வேலணை கிராமிய வைத்தியசாலை, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, சரவணை கிளினிக் நிலையம் ஆகிய இடங்களிலும் -

நாளை வியாழக்கிழமை புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை, அனலைதீவு சுற்றயல் கூறு வைத்தியசாலை, எழுவைதீவு கிளினிக், புளியங்கூடல் ஆரம்ப சுகாதார நிலையம், நயினாதீவு சுற்றயல் கூறு வைத்தியசாலை, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, நாரந்தனை கிளினிக், காரைநகர் சுற்றயல் கூறு வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் பால்மா விநியோகம் இடம் பெறவுள்ளது.

பெற்றோர் குழந்தைகளின் வளர்ச்சிப் பதிவேட்டைச் சமர்ப்பித்து பால் மாவைப் பெற்றுக்கொள்ளலாம்.

(1-203)

## அகதிகள் வரலாற்றில் முதன்முறையாக

# இலங்கையில் எழுதவேண்டிய தேர்வை தமிழகத்தில் எழுதினர்



சென்னை,டிசெ.13

இலங்கையிலிருந்து அகதிகளாகத் தமிழகம் வந்த தரம் 11 மாணவர்கள் இலங்கைப்பாடத் திட்டப்படி நேற்றுமுன் தினம் தேர்வு எழுதினர்.

இலங்கையிலிருந்து கடந்த ஜனவரி முதல் ஒக்டோபர் வரை 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் தமிழகம் வந்தனர். அவர்கள் மண்டபம் முகாம் மற்றும் தமிழகத்தில் உள்ள 19 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தரம் 11 படித்துவந்த மாணவர்கள் அகதிகளாக தமிழகம் வரும்போது தமிழக பாடத்திட்டப்படி 9ஆம் வகுப்பிலேயே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இதனால், மாணவர்களுக்கு இரண்டு ஆண்டு வீணானது. இந்த நிலையில் இந்த ஆண்டு இலங்கையில் நடக்கும் தரம் 11 அரசுப் பொதுத் தேர்வை தமிழகத்திலேயே நடத்த தமிழக அரசு அனுமதி பெற்றுத்தந்தது.

சென்னை சாந்தோம் ரோசரி பள்ளியில் மாணவர்கள் தேர்வு எழுதினர். தேர்வை இலங்கை அரசுத் தேர்வுகள் ஆணையாளர் பூச்சித, உதவி ஆணையாளர் சபிக், இலங்கைத் தூதரக அதிகாரி மகாலிங்கம் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். முதல்நாள் தமிழ் இலக்கியப்பாடத்தில் 60 மாணவர்கள் தேர்வு எழுதினர். தேர்வு எதிர்வரும் 21ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது. இதில் மொத்தம் 100 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர்.

# விசேட பரீட்சைக்கு வாகரையில் ஏற்பாடு

கொழும்பு,டிச.13

ஜீ.சி.ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்ற முடியாமற்போன மாணவர்களுக்கு விசேட பரீட்சை ஒன்றை நடத்த கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

மட்டக்களப்பு வாகரை பகுதியில் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்கள் கந்தளாய் அக்ரபோதி வித்தியாலயத்திற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த தங்களுக்கு மனநிலை பாதிப்படைந்துள்ளதால் பரீட்சைக்குத் தோற்ற முடியாதுள்ளதாக இம்மாணவர்கள் கூறுகின்றனர்.

இதனால் வேறொரு தினத்திற்கு பரீட்சையை நடத்தும்படி அதிகாரிகளைக் கோரியுள்ளனர். இம்மாணவர்களின் பெற்றோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். இதையடுத்தே கல்வி அமைச்சு விசேட பரீட்சை ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

(க-12)

# மன்னாரில் கிளைமோர் சிப்பாய் உயிரிழப்பு

மன்னார் - சிறுகண்டல் பகுதியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் கிளைமோர்த்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இரண்டு படையினர் காயமடைந்தனர்.

சிறுகண்டல் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுப்பட்டிருந்த படையினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

# பாடசாலை அனுமதிக்கு பணம் அறவிடக் கூடாது

## அதிபர்களுக்கு மாகாண அதிகாரி அறிவுறுத்து

அச்சுவேலி,டிச.13

பாடசாலை அனுமதியில் பெற்றோரிடம் பணம் அறவிடுவது தவிர்க்கப்படவேண்டும் என வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தண்டபாணி அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

பாடசாலை அனுமதிக்கு பெற்றோரிடம் வற்புறுத்திப் பணம் பெறுவது தண்டனைக் குரிய குற்றமாகக் கருதப்படுவதால் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இது விடயத்தில் பாடசாலை அதிபர்களைக் கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர் அனுமதிக்கு பணம் அறவிடப் படுவதாக திணைக்களத்திற்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை தொடர் பாக விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(1-202-11)

# வடமராட்சி குடத்தனைப் பகுதியில் படையினர் நடத்திய வைத்திய முகாம்

யாழ்ப்பாணத்தின் 551 ஆவது கட்டளைத் தலைமையகத்தின் கீழ் உள்ள வடமராட்சிப் பிரதேசத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை படையினர் நடத்தியுள்ளனர்.

குடத்தனை, அம்பன், நடுக்குடத்தனை, பொற்பதி ஆகிய கிராம மக்களின் நன்மை கருதி கடந்த ஞாயிற்றுக்கிழமை குடத்தனை அமெரிக்கமிஷன் பாடசாலையில் இம்மருத்துவ முகாம் நடத்தப்பட்டது எனப் பலாலி படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இம்மருத்துவ முகாமில் 500 பேர் வரையானோர் கலந்துகொண்டனர். அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்பட்டன.

யாழ் நடவடிக்கைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இந்த வைத்திய சேவை நடத்தப்பட்டது. தொடர்ந்து இந்தப் பிரதேசங்களில் 3 மாதத்திற்கு ஒரு தடவை மருத்துவ முகாம் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முகாமில் கலந்துகொண்டவர்களுக்கு முதலாவது கெமுனு வோச் படைப் பிரிவினர் 250 உலர் உணவுப் பொதிகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் கட்டளை அதிகாரியுடன் படைப்பிரிவின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர் - என்றுள்ளது.

## நாளை

கார்த்திகை 28
வியாழக்கிழமை
14.12.2006
திதி : நவமி
பிற்பகல் 12.47
நட்சத்திரம் : அத்தம்
பின்னிரவு : 03.20
[illegible] : 07.51 09.21
[illegible] : 01.51 03.21

# கொக்குவில் மோதலில் வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

கொக்குவில் சம்பியன் வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் சிக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு நேற்றுச் சென்ற யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தினார்.

சுமார் 60 வயது மதிக்கப்படும் வயோதிபர் ஒருவர் இச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

அவர் அடையாளம் காணப்படாததால் இனங்காண்பதற்காக சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரப் பகுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் நிர்ணயிக்கப்பட்ட இடங்களிலேயே வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும். பொது மக்களின் நலன் கருதியும், ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வாகனங்கள் தரிப்பதற்கான இடங்கள் பின்வருமாறு:-

★ பழைய பூங்கா, கச்சேரியடியில் சகல வாகனங்களும் நிறுத்தலாம்.

★ புதிதாக கட்டப்பட்டு வரும் நீதிமன்றிற்கு முன்பாகவுள்ள இடத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடுத்தப்படும் வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

★ யாழ்.பொது நூலகம் முன்பாக, சப்பல் வீதியில் தனியார் வாகனங்கள் பாரவூர்திகள் நிறுத்தப்பட வேண்டும்.

★ வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக, வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் நிறுத்தப்படும்.

★ பழையதபால் நிலைய வீதியில் உள்ள கோவில் அமைந்திருக்கும் இடத்தில் துவிச்சக்கர வண்டிகளும் மோட்டார் சைக்கிள்களும் நிறுத்தப்படும்.

★ ரயில் நிலையத்திற்கு முன்பாக உள்ள மைதானத்தில் சகல வாகனங்களும் நிறுத்தப்படலாம்.

★ யாழ்.வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள புளொட் காரியாலயத்தினால் நடத்தப்பட்டுவரும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் துவிச்சக்கர வண்டிகளும், மோட்டார் சைக்கிள்களும் நிறுத்தலாம். (இது தற்போது மாநகர சபையினால் நடத்தப்பட்டு வருகிறதுஇ.)

★ யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்கள் அனைவரும் தங்களது வாகனங்களை யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்திலேயே நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன், அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் தங்களது வாகனங்களை காரியாலயங்களிலேயே நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. - என்றுள்ளது. (1)

## சிவிலியன்கள் மீதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டுகின்றனர். இதேநேரம் அரசோ, பொதுமக்களைப் புலிகள் கேடயமாகப் பாவித்துத் தாக்குதலை நடத்துகிறார்கள் என்று புலிகள் மீது பழியைப் போடுகிறது.

வாகரையிலும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிராமப் புறங்களிலும் இரு தரப்பாரும் பரஸ்பரம் ஷெல் வீச்சுகளை நடத்துகிறார்கள். அடிப்படை மனித உரிமைகள் எல்லாம் காவு கொடுக்கப்படுகின்றன என்று கொழும்பிலுள்ள ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதியும், மனித உரிமை சேவைகளுக்கான ஒருங்கிணைப்பாளருமான எடின் அவாட் அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது நேரடியாக எறிகணைத் தாக்குதல்கள் நடத்துவதை இரு தரப்பினரும் நிறுத்த வேண்டும். அத்தோடு, இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கான சுதந்திர நடமாட்டமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் எடின் அவாட் வலியுறுத்தியிருக்கிறார்.

திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான சிங்களக் குடும்பங்கள், இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பாதுகாப்பான கந்தளாய்க்கு நகர்ந்து அங்குள்ள பௌத்த விகாரைகளிலும், பாடசாலைகளிலும் புகலிடம் தேடியுள்ளனர்.

### எதிர்த் தாக்குதல்

வாகரை வைத்தியசாலைக்கு அருகிலிருந்து புலிகள், இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளை நோக்கி நேற்று எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்த போதிலும், வைத்தியசாலைக்கு அருகிலிருந்துதான் புலிகள் தாக்குகிறார்கள் என்பதை இராணுவம் ஊர்ஜிதம் செய்து பதில் தாக்குதலை நேற்று நடத்தவில்லை என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

''புலிகள் தாக்குதல் நடத்தும்போது ஆட்லறி சுடுகலனை குடிமக்கள் வாழும் பகுதிக்கு நகர்த்தி விட்டே படையினர் மீது தாக்குதலைத் தொடுக்கிறார்கள். இது அவர்களின் தந்திரமாக அதிக காலம் இருந்து வருகிறது'' என்றும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார். (ஐ)

## கண்காணிப்பு குழுவினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றஞ்சாட்டியிருக்கிறது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தொல்பினூர் ஒமர்சன், பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் விரும்பியவாறு செல்ல அனுமதிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

''யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இரு தரப்பினரதும் கடமை. ஆனால் வாகரைப் பகுதிக்குச் செல்லும்போது எமது பாதுகாப்பை தங்களால் உறுதிப்படுத்த முடியாது என்று இராணுவத்தினர் கூறுகின்றனர்'' என்றும் அவர் சொன்னார். - (த-12)

## சர்வகட்சிக் குழுவிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11 பேர் தயாரித்த தீர்வுமுன் யோசனை ஜனநாயகத்திற்கு எதிரான யோசனை. இனப்பிரச்சினைத் தீர்வுக்கென பொதுமக்களிடமிருந்து சுமார் 700 யோசனைகள் கிடைத்தன. எனினும், அதனை ஆராயாமல் 11 பேர் கொண்ட குழு சமர்ப்பித்த யோசனையானது, மக்களின் விருப்பத்திற்கு எதிரானது. அதனால், இந்த விடயத்தை மக்கள் மத்தியில் ஜே.வி.பி. எடுத்துச் செல்லவுள்ளது.

ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழு, அனைத்துக் கட்சிக் குழுவிற்கு ஆலோசனையை வழங்குவதற்காகவே அமைக்கப்பட்டது. ஆனால், அது தமது வரம்பிலிருந்து மீறி அரசியல் அமைப்பையே மாற்றும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.

1987ஆம் ஆண்டில் வெளிநாடு ஒன்றின் தலையீட்டினால், இலங்கை அரசியல் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. அது மக்களின் அபிலாஷைகளுக்கு மாறான விடயமாகும்.

இந்நிலையில் குறித்த 11 பேர் சமர்ப்பித்த யோசனையானது வெளிநாட்டின் தலையீட்டுடன் திணிக்கப்படுகின்ற அரசியல் அமைப்பு மாற்றம் என நாம் கருதுகிறோம்.

இதனைவிட கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சமஷ்டி முறைத் தீர்வுக்கெதிரான ஒற்றையாட்சி முறையை முன்வைத்து அதன்மூலம் கிடைத்த வெற்றிக்கு இந்த யோசனை விரோதமானது. என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-12)

## தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவில்லை. உத்தியோகபூர்வமாக அவ்வறிக்கைகளை எம் மிடம் கையளித்தால் அவற்றைக் கட்சி ஆராய்ந்து அவை தொடர்பான கட்சியின் நிலைப்பாடு என்னவென்று தெரிவிக்கப்படும்.

தேசியப் பிரச்சினைக்கு உண்மையில் தீர்வுகாணும் விதமாக அப்பரிந்துரைகள் இருந்தால் அவற்றுக்கு நிச்சயம் நாம் ஆதரவை வழங்குவோம் - என்றார். (ஐ)


புவியியல்
திரு. N.பாபு
2007
விடுமுறை கால வகுப்புகள்
விக்னா - யாழ்ப்பாணம்
திங்,செவ்,வியா,வெள் 11.30 am
யூனிவேர்சல் - யாழ்ப்பாணம்
திங்,செவ்,வியா,வெள் 12.30 pm


## பயங்கரவாதத் தடுப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுங்கட்சியுடன் இணைந்து ஒப்பந்தம் செய்ததை எந்த வகையில் நியாயமாகும்? ஏனெனில், அரசினால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கும், வரவு-செலவுத் திட்டத்திற்கும் ஆதரவளித்து மக்களின் எதிர்பார்ப்பை ஐ.தே. கட்சி சிதறடித்து விட்டது.

புலிகளைத் தடை செய்யக் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்திவரும் ஜே.வி.பியினரும், ஹெல உறுமயவினரும் என்ன செய்கிறார்கள்?

''கெரில்லா யுத்தங்களை ஆரம்பிக்கப் போகிறார்களா?

''அரசால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவில் பெரும்பான்மையினர் சமஷ்டி முறையையே விரும்புகிறார்கள். அவர்களை அரசு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் கைது செய்ய முடியுமா?''

- இவ்வாறு விக்கிரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்தார். (ஐ)

## உதயன் பணிமனைக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 10.50 மணியளவில், அலுவலகத்தின் நுழைவாயில் வழியாக திடீரெனப் பிரவேசித்த அடையாளம் தெரியாத இந்த இரு நபர்களும் அலுவலகத்தின் பாதுகாப்புப் பிரிவில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அலுவலர் மீது வேட்டுக்களைத் தீர்த்தனர். கை, வயிறு, நெஞ்சு ஆகிய இடங்களில் குண்டு பாய்ந்த நிலையில் அந்தப் பொலிஸ் அலுவலர் தன்னைச் சுதாரித்துக்கொண்டு எழுந்து ஆயுதபாணிகள் தப்பிச்சென்ற திசையை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தார். இதனால் அப்பகுதி வேட்டுச் சத்தங்களால் சிறிதுநேரம் அதிர்ந்தது.

படுகாயங்களுக்கு உள்ளான இர்ஷாட் (வயது-24) என்ற அந்தப் பொலிஸ் அலுவலர் பின்னர் 'உதயன்' நிறுவன வாகனத்தில் ஏற்றப்பட்டு யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்கு உடனடியாகச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

ஆயுதபாணிகள் இருவரும் கைத்துப்பாக்கிகளை வைத்திருந்தனர் என்று கூறப்படுகிறது. அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது 'உதயன்' நிறுவன பாதுகாப்பு ஊழியர்கள் இருவரும் அங்கு கடமையில் இருந்தனர். எனினும் தெய்வாதீனமாக அவர்களுக்கு காயங்கள் ஏற்படவில்லை. இந்தச் சம்பவத்தையடுத்து 'உதயன்' நிறுவனத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜபார் தலைமையிலான பொலிஸ் குழு ஒன்று அங்கு வந்து விசாரணைகளை நடத்தியது.

யாழ். நகரிலுள்ள 512 ஆவது படைப் பிரிவில் இருந்து மேஜர் தர அதிகாரி ஒருவர் தலைமையில் இராணுவத்தினரும் அங்கு வந்து தகவல்களைச் சேகரித்தனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி அப்டெல் எவ் புர்கனும் (Abdel F Burkan) 'உதயன்' நிறுவனத்துக்கு வந்து பிரதம ஆசிரியருடனும் நிறுவன அதிகாரிகளுடனும் உரையாடி விவரங்களைச் சேகரித்தார்.

'உதயன்' நிறுவனத்தில் இரு பணியாளர்கள் உயிரிழக்கக் காரணமாக அமைந்த கடந்த மே மாதம் நடத்தப்பட்ட - கொடூரத் தாக்குதலின் பின்னர் நிறுவனத்தின் பாதுகாப்புத் தொடர்பில் தங்களது கண்காணிப்பை அதிகரித்திருந்ததாக கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி அப்போது தெரிவித்தார்.

நேற்றைய சம்பவம் நடப்பதற்கு சற்று முன்பாக 'உதயன்' நிறுவனப் பகுதி ஊடாக தாங்கள் தமது வாகனத்தில் கடந்து சென்றனர் என்ற தகவலையும் அப்போது அவர் வெளியிட்டார்.

'உதயன்' நிறுவனம் மீது தொடராக நடத்தப்பட்டு வரும் வன்முறைத் தாக்குதல்களில் நேற்று நடந்திருக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்களுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் தெரியப்படுத்தப்படும் என்றும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டென்ட் அதிபர்எரிக் பெரேரா தலைமையில் விசேட பொலிஸ் குழு ஒன்றும் நேற்று 'உதயன்' பணிமனைக்கு வந்து தாக்குதல் தொடர்பாக விசாரித்தது. (ஐ-203-1)

## உதயனுக்கு சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதற்காகவே இந்த விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பிரிவில் மொத்தம் நான்கு நாடுகளைச் சேர்ந்த ஊடகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றில் ஒன்று உதயன்.

மற்றைய மூன்றும் பர்மா, லெபனான், ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஊடகங்கள் ஆகும்.

இலங்கையில் முதல் முறையாக உதயனுக்கே இந்த விருது கிடைத்துள்ளது.

உதயனுக்கு இந்த விருது வழங்கப்பட்டதன் மூலம் இலங்கையின் ஊடகத்துறை முழுவதுமே பாராட்டுகிறது என்று ஊடகத்துறையினர் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

நான்கு பிரிவுகளாக விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

1. பத்திரிகைச் சுதந்திரத்துக்காகத் தனது அர்ப்பணிப்புடனான சேவையை நிரூபித்த பத்திரிகையாளர்கள். இவர்கள் இந்த ஆண்டின் பத்திரிகையாளர்கள்.

2. செய்திகளைத் தெரிவிப்பதற்கும், அவற்றை அறிந்து கொள்வதற்குமான உரிமைக்காகப் போராடும் செய்தி ஊடகங் கள்.

3. பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பவர்கள்.

4. இலத்திரனியல் துறையில் அதாவது இன்டர்நெட்டில் செய்திகளையும், தகவல்களையும் வழங்குவதிலிருந்து தடுத்து நிறுத்தப்பட்டவர்கள்.

இந்த நான்கு பிரிவுகளிலும் மொத்தம் 10 பேருக்கும் நான்கு செய்தி ஊடகங்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

பரிசு பெற்ற ஊடகவியலாளர்கள் 10 பேரும் முறையே எரித்திரியா, மியான்மர், கொலம்பியா, சிரியா, சீனா, கியூபா, மெக்ஸிகோ, துருக்மெனிஸ்தான், கொங்கோ ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

35 பேரைக் கொண்ட சர்வதேச ஜூரிகள் குழு ஒன்றே பரிசுக்குரிய ஊடகவியலாளர்களையும், ஊடகங்களையும் தெரிவு செய்தது. விருதுகள் பெறுவோரினதும் ஊடகங்களினதும் விவரங்கள் இம்மாதம் 8ஆம் திகதி வெளியிடப்பட்டன.

ஜூரிமாரின் கருத்துப்படி 'உதயன்' அதிக வாசகர்களைக் கொண்ட தினசரிப் பத்திரிகை, 20 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. வட இலங்கையில் யுத்தம் நடந்து கொண்டு இருந்தாலும், 'உதயன்' ஆரம்பம் முதலே நடுநிலைக் கொள்கை பிறழாமல் இயங்கி வருகிறது. 'உதயன்' பத்திரிகை ஊழியர்களில் ஐவர் இந்த வருடம் கொல்லப்பட்டுள்ளார்கள். அவர்களில் இருவர் இந்த வருடத்தின் உலகப் பத்திரிகைத் தினத்தன்றே கொல்லப்பட்டார்கள்.

கொழும்பிலிருந்து வெளிவரும் உதயனின் சகோதரப் பத்திரிகை 'சுடர் ஒளி' அலுவலகம் மீது கடந்த செப்டெம்பர் மாதத்தில் தாக்குதல் நடந்தது.

யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகையில் அறிக்கைகளைப் பிரசுரிக்குமாறு அங்குள்ள பத்திரிகையாளர்கள் இரு தடவைகள் துப்பாக்கி முனையில் பலவந்தப்படுத்தப்பட்டார்கள்.

இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விருது வழங்கும் நிகழ்வு நேற்று (12.12.2006) செவ்வாய்க்கிழமை பிரெஞ்சு நேரப்படி இரவு 7.30 மணிக்கு பாரிஸ் நகரில் EDF Electra வில் நடைபெற்றது.


CHEMISTRY DAY CLASS
By: அன்பழகன் B.Sc
1. Inorganic
Mon. - Fri. 10.30 - 11.30
2. Inorganic
Wed., Thus. 11.30 - 12.30
3. Organic
Mon., Fri. 11.30 - 12.30
4. [illegible]
Sat. 10.30 - 12.00
5. வெப்ப இரசாயனம்
Sun. 10.30 - 12.00
6. SEMINAR
* இம்மாதம் 6 கருத்தரங்குகள்
ஆரம்பம்: 14-12 வியாழன் 10.30
NEW SCIENCE CENTRE யாழ். நகர்

A/L 07, 08, DAY
வணிகக்கல்வி
K. முரளி
வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்
நாவலர் ஆனைப்பந்தி | நாவலர் திருநெல்வேலி
விக்னா யாழ்ப்பாணம் | C.C.A. சுன்னாகம்
Business Collge யாழ்ப்பாணம் | கலையகம் ஆவரங்கால்
I.B.S. சுண்டுக்குளி | I.B.S. நல்லூர்
விடுமுறை கால நேர அட்டவணையை மேற்குறித்த இடங்களில் பெற்றுக்கொள்ளவும்.

A/L 07, 08, DAY
பொருளியல்
N.B. கஜீதரன்
விடுமுறைக்கால வகுப்புகள் பின்வரும் இடங்களில் நடைபெறுகின்றன.
விக்னா யாழ். நகர் | நாவலர் ஆனைப்பந்தி
நாவலர் திருநெல்வேலி | Shamrock ஈச்சமோட்டை
RADIANT அரியாலை | N.C.A இணுவில்
Brain Power குருநகர் | Business Collge யாழ். நகர்
நேர அட்டவணை அலுவலகங்களில்

A/L 07, 08, DAY
கணக்கீடு
P. பகீரதன்
வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்
Business Collge யாழ். நகர் (மத்திய கல்லூரிக்கு அருகில்)
நாவலர் ஆனைப்பந்தி | நாவலர் திருநெல்வேலி
விக்னா யாழ். நகர் | I.B.S. சுண்டுக்குளி
Note: 10 பரீட்சைகளும் அவற்றுக்கான கருத்தரங்குகளும் நடைபெறும்.
நேர அட்டவணை அலுவலகங்களில்.

CHEMISTRY CENTRE
Temple Rd, (Greenpark முன்னே)
A/L 2008
INORGANIC
ஆரம்பம்
13/12
Wen 4.00
By:
அன்பழகன் B.Sc

தரம் 5 - 11 வரையான வகுப்புக்கள்
கல்வியாண்டு 2007
ஆரம்பம்: 14.12.2006
வியாழன் 8.00 am
★ புலமைப்பரிசில் வகுப்புக்களும் ஆரம்பமாகின்றது.
By:
கபிலன்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org